1979 ஏப்ரல் 26]

கூறியபடி ஒன்பது பணி தொழில் கூட்டுறவுச் சங்கங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திவிட்டபிறகு மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டுவர பரிசீலனை செய்யும்போது வட ஆற்காடு மாவட்டத்திற்கு முன்னுரிமை—'பஸ்ட் பிரிபரன்ஸ்' கொடுக்கப் படும்.

சேரன்மாதேவி அரசினர் மருத்துவமனை

*வினா எண். 842—திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சேரன்மாதேவி அரசினர் மருத்துவமனையை விரி வாக்குவது குறித்து அரசிற்கு மாவட்ட மருத்துவ அதிகாரியிட மிருந்து மதிப்பீடு வந்துள்ளதா?

(ஆ) அப்படியானால் எவ்வளவு?

(இ) எப்போது விரிவாக்கல் பணிகள் ஆரம்பித்து முடிவடையும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ), (ஆ) & (இ) : இம்மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்ட 1979—80 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி புதிய பணித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. பி. எச். பாண்டியன் : இந்தப் பெரியார் நூற்றாண்டு விழாவில் சேரன்மாதேவியைத் தாலுகாவாக மாற்ற வருவாய்த் துறை அமைச்சரும், புரட்சித் தலைவரும் அறிவித்திருக் கிறார்கள். திராவிட சமுதாயத்தின் பெயர்பெற்ற சேரன்மாதேவி தாலுகா ஆகின்ற நேரத்தில் அந்த மருத்துவமனையை தாலுகா மருத்துவமனை அளவுக்கு உயர்த்த அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 6 படுக்கை வசதிகள் கொண்ட அந்த மருத்துவ மனை தற்போது இன்னும் நிறையப் படுக்கை வசதிகள் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு 20 படுக்கை வசதிகளைச் செய்ய, பிரசவப் பிரிவு, அறுவை அரங்கம் இவைகளை வைத்து சுமார் 2 லட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கான திட்டம் ஒன்று 1979—80 ஆம் ஆண்டில் 2-வது பிரிவுத் திட்டமாக செய்யப்பட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இயக்குநரிட மிருந்து வரைபடம், மதிப்பீடுகள் இவைகளைப் பெற்று அதற்கு ஒப்புதல் வழங்கப்படும். படிப்படியாக இந்த மருத்துவ மனையின் தரம் உயர்த்தப்படும்.